ARTICLE 02 · கட்டுரை 02 | சங்க இலக்கியமும் தமிழர் வாழ்வியலும்

Special Issue · Vol. 10, No. 03 (October 2026) · pp. 9–20

# அகஇலக்கியங்களில் அறத்தொடு நிற்றல்

*Arattodu Nitral in Akam Literature*

**முனைவர் ப. நதியா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 620 019

***Dr. P. Nathiya**, Assistant Professor, Department of Tamil (SFC), Urumu Dhanalakshmi College, Tiruchirappalli – 620 019*
**மின்னஞ்சல்:** mailmenathiya@gmail.com · **ORCID:** https://orcid.org/0000-0001-5836-0365

## ஆய்வுச் சுருக்கம்

அறத்தொடு நிற்றல் சங்க அக இலக்கியத்தின் முதன்மையான கருத்தாக்கங்களுள் ஒன்றாகும். தலைவியின் களவுக் காதலை உரியவர்களுக்கு வெளிப்படுத்தி, அதனைச் சமூக ஏற்புக்கும் திருமணத்திற்கும் இட்டுச் செல்லும் செயல்முறையை அது குறிக்கிறது. குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை முதலிய எட்டுத்தொகை நூல்களில் இக்கருப்பொருள் இடம்பெறுகிறது. பொதுவாகத் தலைவி தன் காதலைத் தோழியிடம் வெளிப்படுத்த, தோழி அதனைச் செவிலித்தாய்க்கோ நற்றாய்க்கோ உணர்த்துகிறாள். களவிலிருந்து கற்பிற்கு மாறும் நிலையில் அறத்தொடு நிற்றல் ஒரு முக்கியமான கட்டம் எனத் தொல்காப்பியர் விளக்குகிறார். இவ்வாறு அது தனிமனிதக் காதலையும் சமூக ஏற்பையும் இணைக்கும் பாலமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** அறத்தொடு நிற்றல்; சங்க இலக்கியம்; அக மரபு; களவு; கற்பியல்; களவுக் காதல்; சமூக ஏற்பு; தொல்காப்பியம்; சங்ககாலச் சமூகம்

### Abstract

Araththodu Nittral is an important concept in Sangam Akam Literature. It refers to the process of revealing the secret love relationship of the heroine to the appropriate persons and leading it towards social acceptance and marriage. This theme is found in the Ettuthokai works such as Kurunthokai, Ainkurunuru, Natrinai, Akananuru and Kalithogai. The heroine usually reveals her love to the friend and the friend conveys it to the foster-mother or mother. Tolkappiyar explains Araththodu Nittral as an important stage in the transition from Kalavu to Karpiyal. Thus it serves as a link between personal love and social acceptance.

**Keywords:** Arattodu Nitral; Sangam Literature; Akam Tradition; Kalavu; Karpiyal; Secret Love; Social Acceptance; Tolkappiyam; Sangam-Age Society

## முன்னுரை

‘அறம்’ எனப்படுவது, பல பண்புகளையும் தழுவிய பொதுச் சொல்லாயினும், ஈண்டு பெண்ணுக்குரிய முதற் பண்பான கற்பையே குறிக்கும். கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்துதல் என்பது இத்துறையின் பொருள். பெற்றோருக்கு அறிவித்தல் தோழியின் நோக்கம் இல்லை. அங்ஙனம் அறிவிப்பு தலைவி ஏற்கனவே கற்பு நெறிப்பட்டு விட்டாள் என்பதனை முதன்மையாக வலியுறுத்துவதே அவள் நோக்கமாகும்.

இன்நன்னோக்கம் சங்கப் புலவர்களின் நெஞ்சைப் பிணித்து, ஆண்மை சான்ற பல பாடல்களை உருவாக்கி உள்ளது. வேறு வழியெல்லாம் பயனற்றுப்போனகாலை-கலை அறத்தொடு நிற்றல் என்னும் நேர் நெறியைத் தலைவியும், தோழியும்

மேற்கொள்ள நாணமும், கற்பும் ஒருவர் தம் காக்கத்தகும் இரு பேரொழுக்கங்கள் ஆயினும், குழந்தை இறப்பினும் தாய் பிழைக்க என்பது போல, நாண் விட்டேனும் கற்பைத் தலையாகப் போற்றியொழுக வேண்டும். என்பது தமிழ் முன்னோர் கண்ட மனையியல், இதனடிப்படையில் அறத்தொடு நிற்றலின் விளக்கத்தினை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## யார் யார்க்கு உரியவை?

அறத்தொடு நிற்றல் என்ற நுண்துறை பற்றி 51செய்யுட்கள் சங்கவிலக்கியத்துள் உள்ளன. கூறுபாடுகளை எல்லாம் விளக்கும் வனப்பு நிலையில் சில செய்யுட்கள் அமைந்துள்ளன. களவொழுக்கத்தை யார்க்கு யார் வெளிப்படுத்தலாம்? தோழியும் அறியாது மறைந்தொழுகிய தலைவி தன் களவை அவளுக்குக் கூறி அறத்தொடு நிற்பாள். பின்னர்த் தோழி தன் தாயாகிய செவிலிக்கும், செவிலி தலைவியின் தாயான நற்றாய்க்கும் களவை கூறுவர். இதுவே வயதுக்கும், உறவுக்கும் ஒத்த முறையாகும். நற்றாயோ தலைவியின் தந்தைக்கும் உடன் பிறந்தோர்க்கும் செல்லாற் கூறாது அவர்கள் அறிந்து கொள்ளுமாறு குறிப்பால் தெரிவிப்பாள்.

> ‘தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப....’
>
> (தொல்.1082)

என்னும் உளநலம் நினையத்தகும். தோழி செவிலி, நற்றாய், நால்வரும் பெண்பாலார், ஆதலின் சொல்லால் சொல்லிக் கொள்ளலாம் எனவும் தந்தையும், அண்ணனும் நெடுங்கிய கேளிரேனும் குறிப்பால் உணரச் செய்தல் நல்லது எனவும் அகத்திணையிலக்கணம் மனப்படிகள் வகுத்துக் காட்டும். சங்கப்புலவர் கபிலர் ஐம்பத்தோராடிக் கலிப்பாட்டில் (கலி.39) அறத்தொடு நிலையை நிகழ்ச்சி முறையால் வைத்துச் சிறுகதை வேகமாகச் சொல்லிச் செல்வர்.

> ‘அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
> என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்’
>
> (கலித்-குறிஞ்சிக்கலி-39)

என நிற்குமுறையினையும் சுட்டிக் காட்டுவர். ஐந்திணைக் களவுத் துறைகளுள் அறத்தொடு நிற்றல் முதற்பெருஞ் சிறப்புடையது அதனாலன்றோ? வேற்றரசன் ஆரியன் பிரகத்தனுக்குத் தமிழ்மொழியின் தனியிலக்கிய மதிப்பை அறிவுறுத்த விரும்பிய கபிலர் ‘அறத்தொடு நிற்றல்’ என்னும் துறையில் 261 அடிகள் கொண்ட ‘குறிஞ்சிப்பாட்டை’ யாத்தார்.

## அறத்தொடு நிற்றல் நிகழும் முறை

அறத்தொடு நிற்றல் என்பது அகப்பொருள் இலக்கணத்தில் களவொழுக்கம் கற்பொழுக்கமாக மாறும் தருவாயில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. ஒத்த தலைவனும், தலைவியும் தம்முள் ஒருவரையொருவர் சந்தித்து இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு முதலிய களவுப் புணர்ச்சிக்குரிய ஒழுக்கங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வொழுகும் ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலையில், தலைவியின் விருப்பத்தோடு தோழி செவிலித்தாய்க்கு உணர்த்துவாள். இவ்வாறு செவிலிக்கு வெளிப்படுத்தல் அறத்தொடு நிற்றல் எனப்படும்.

“கற்பென்னும் கடைப்படியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப்படுத்தல்” (குறுந்தொகை - 23) என்பது இத்துறையின் பொருள்.

களவொழுக்கத்தினைத் தோழிக்கு வெளிப்படச் செய்து அவரால் குறித்த தலைவனுக்கே கொடுக்க செய்தல் தக்கது என்று கருதி, தோழி களவொழுக்கத்தை வெளிப்படுத்த தொடங்குவாள். இங்ஙனம் வெளிப்படுத்தலையே அறத்தொடு நிற்றல் என்று கூறுவர்.

தலைவியின் இல்லத்தார்க்கு அவள் தலைவனோடு பூண்ட களவொழுக்கத்தை உணர்த்துதல் இன்றியமையாததாகும். இதற்கான பல சூழ்நிலைகள் ஏற்படும். அத்தகைய சூழ்நிலைகளில் தலைவி தான் தலைவனோடு கொண்ட கேண்மையைத் தோழி வழிச் செவிலிக்கும், நற்றாய்க்கும் உணர்த்துவாள். தலைவி பூண்டது அவள் தோழிக்கு உணர்த்துதலின் இஃது அறத்தொடு நிற்றல் எனப்பட்டது.

தலைவி அறத்தொடு நிற்றலுக்குரிய சூழ்நிலைகளை,

“ஆற்றாறு அஞ்சினும் அவன் வரைவு மறுப்பினும்
வேற்று வரைவு நேரினும் காப்புக்கை மிகினும்
ஆற்றுறத் தோன்றும் அறத்தோடு நிலையே”

(தொல்-பொருளதிகாரம் - களவியல் - நூ.எண்.47)

என்னும் நூற்பா தலைவன் தன்னைக் காணவரும் வழியில், அவனுக்கு ஏதேனும் கேடு வருமோ என்று தலைவி அஞ்சிய போதும், தான் காதல் கொண்ட தலைவனைத் தலைவி மணக்க அவள் பெற்றோர் ஒப்புதல் தராத போதும், பெற்றோர் வேறொரு தலைவனோடு தலைவியை மணம் பேச முற்பட்ட போதும், அவளை இல்லத்தின்கண் காவலில் இருத்திய போதும் தலைவி அறத்தொடு நிற்கும்நிலை தோன்றும் என உணர்த்துகின்றது. தலைவி அறத்தொடு நிற்றலுக்கு ஒரு முறை உண்டு. தலைவி தன் தோழியிடம் அறத்தொடு நிற்பாள். தோழி தன் தாயும் தலைவியின் வளர்ப்புத் தாயுமான செவிலியிடம் அறத்தொடு நிற்பாள்; தலைவியைப் பெற்ற தாயான நற்றாயிடம் செவிலி அறத்தொடு நிற்பாள் நற்றாய் தந்தைக்கும் உடன் பிறந்தாருக்கும் அறத்தொடு நிற்பாள்.

## தலைவி அறத்தொடு நிற்கும் இடம்

தலைவன் ஒரு வழி தணர்ந்த போதும், வரைவிடை வைத்து பொருள் வயின் பிரிந்த போதும், செவிலி தலைவனிடம் குறியிடத்துக் கண்ட போதும், தலைவி இற்செறிக்கப்பட்ட போதும், தலைவனை பிரிந்த துன்பத்தால் தலைவி வருந்தும் போதும், அவள் துன்பத்தின் காரணத்தை தோழி வினவிய போதும், அங்ஙனம் தோழி தலைவியை வினவாத போதும் தலைவி அறத்தொடு நிற்பாள்.

“கையறு தோழி கண்ணீர் துடைத்துழிச்
கலுழ்தற் காரணம் கூறலும் தலைவன்
தெய்வம் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறலும் இகந்தமை இயம்பலும்
இயற்பழித்து உரைத்துழி இயற்பட மொழிதலும்
தெய்வம் பொறைகொளச் செல்குவம் என்றலும்
இல்வயிற் செறித்தமை சொல்லலும் செவிலி
கணையிருள் அவன் வரக் கண்டமை கூறலும்
எனவுறை இயம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலை தனக்குரிய”

(தஞ்சைவாணன் கோவை-288)

எனத் தலைவி அறத்தொடு நிற்றலை ஏழுவகையாக ‘நம்பி அகப்பொருள்’ விளக்குகின்றது.

இதனை ஐங்குறுநூற்றில்,

‘அம்ம வாழி தோழி பாசிலைச்
செருந்தி தாய விருங்கழிச் சேர்ப்பன்
தான் வரக் காண்குவ நாமே
மறந்தே மன்ற நாணுடை நெஞ்சே”

இது களவு நீடுவழி வரையலன் கொல் என்று அஞ்சிய தோழிக்கு தலைமகன் வரையும் திறம் தெளிக்க தெளிந்த தலைமகன் சொல்லியது. இப்பாடலின் பசிய இலைகளை உடைய செருந்தி மரத்தின் கிளைகள் பரவிய பெரிய களியினையுடைய சேர்ப்பன், நம்மை தெளிவித்த போழ்து கூறியவற்றை நாணுடைமையால் முற்றும் மறந்தோம். நம்மை என்றும் மறவாத மாண்புடையவன் தலைமகன் என்பதனை,

‘நாடறி நன்மணம் அயர்கம் சின்னாள்
கலங்கள் ஓம்புமின் இளங்கிழையீர்’

(குறிஞ்சிப்பாட்டு 231-233)

என்று கூறி தெளிந்ததனை நினையாது வரையலன் கொல் என அஞ்சுகின்றாள். ஆதலில் மறந்தோம் மன்ற என்றும் இனிநாமே அவன் வரக் காண்போம். எனவே அஞ்சுதலை ஒழிப்பாயாக, என தலைமகள் தோழியிடம் கூறினாள் என இப்பாடல்,

“வரை இடைவைத்த காலத்து வருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்
தானே கூறும் காலமும் உளவே”

(தொல்காப்பியம் களவியல் நூற்பா - 22)

என்னும் இலக்கண விளக்க நூற்பாவின் படி இஃது அஞ்சிய குறிப்புணர்ந்து கூறியதாக கொள்ளப்படுகிறது. குறிஞ்சி திணையின்,

“அன்னாய் வாழிவேண் டன்னை யன்னை
தானு மலைந்தா னெமக்குந் தழையாயின
பொன்வீ மணியரும் பினவே
என்ன மரங்கொலவர் சாரலவ்வே”

(ஐங்கூறுநூறு – குறிஞ்சித்திணை 201)

இது, நொது மலர் வரைவின்கட் செவிலி கேட்க மாற்றாள் தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிலை குறித்துக் கூறியது.

இப்பாடலில், ‘என்னை தானும் மலைந்தான் எமக்கும் தலையாயின’ என்பதை தலைவன் பூத்தருபுணர்ச்சி கொண்டதையும் தலையாக உதவியதையும் அறியலாம். தலைவி, வேங்கை பொழிலகத்தே தலைவனை தலைக் கூடினமையை வெளிப்படுத்தலில் அறத்தொடுநிலை காணப்படுகிறது. இதனை,

“நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
.......................................................
முன்னிலை அறன் எனப்படுதல் என்று இருவகைப்
புரைதீர் கிளவி”

என்னும் நூற்பாவில் காணலாம். இதனை அகநானூற்றில்,

“மன்ற வேங்கை மணநாட் பூத்த
மணியே ரரும்பின் பொன்வீ தாஅய்”

(தொல்பொருள் களவியல் -24)

என்னும் வரிகளில் அறியலாம். இது போன்ற பாடல் குறுந்தொகையிலும், தலைவி தன் துன்பத்தைத் தோழியிடம் உரைத்து அறத்தொடு நிற்றலைக் காணலாம்.

“யாரும் இல்லை தானே கள்வன்
தான் அது பொய்ப்பின் யான்எவன் செய்வோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே”

(குறுற்தொகை-25)

தோழி அறத்தொடு நிற்க வேண்டுமாயின் தலைவிக்கு அறத்தொடு நிற்றலுக்குரிய எண்ணம் இருந்தாலொழிய அறத்தொடு நிற்றல் நிகழாது என்பதனைத் ‘தொல்காப்பியர்’.

“அறத்தொடு நிற்றல் காலத்து அன்றி
அறத்தியல் மரபின் தோழி என்ப”

(தொல்பொருள்-11)

என்று கூறுகின்றார். தோழி அறத்தொடு நிற்றலை ‘நம்பியகப் பொருளில்’ காணலாம்.

“எறிவளை வேற்றுமைக்கு ஏதுவினாவினும்
வெறிவிலக் கியவழி வினாவினும் பாங்கி
பூவே புனவே களிறே என்றிவை
ஏது வாகத் தலைப்பாடு இயம்பும்”

(அகப்பொருள் விளக்கம் நூ.எண்.177)

தோழி அறத்தொடு நிற்றலில் ஏழு முறையில் நிகழும் என்பதனை ‘தொல்காப்பியர்’

“எளித்தல் ஏத்தல் வேட்கை யுரைத்தல்
கூறுதல் லுசாதல் ஏதீடு தலைப்பாடு
உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்”

(தொல்பொருள் - 12)

குறிப்பிடுகின்றார்.

அவை தலைவனை உயர்த்திக் கூறுதல், தலைவன், தலைவி மீது கொண்ட வேட்கையை மிகுத்துரைத்துக் கூறுதல், தாயாரிடம் அவர்களே முடிவு கூறுமாறு வினவுதல் போல் பேசுவாள், இருவரும் எதிர்பாராது எதிர்ப்பட்டனர் என்பாள், முன்பு கூறியவற்றில் பொய்யாகப் புனைந்தும் பேசுவாள், ஆதலால் இறுதியில் நடந்த உண்மையை அப்படியே சொல்வதுடன் கூடிய ஏழு வகைக் கூற்றினை தோழி அறத்தொடு நிற்றலில் நிகழும் முறை என்பர். ஐங்குறுநூற்றில் உள்ள அறத்தொடு நிற்றல் என்ற துறையில் அமைந்த பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தோழியின் இயல்பை காணமுடிகிறது. மருதத்திணையில் வரும் 10,28,29,30 எண்ணுள்ள பாடல்களில் தோழி அறத்தொடு நிற்றலைக் காண முடிகிறது.

“வேப்புநனை யன்ன நெடுங்கட் கள்வன்
தண்ணக மண்ணளை நிறைய நெல்லின்
இரும்பு வுரைக்கு மூரற்கிவள்
பெருங்கவி னிழப்ப தெவன்கோ லன்னாய்”

(ஐங்.மருதம்-30)

இதுவரை எதிர் கொள்ளார், தமர் அவன் மறுப்புழித் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. இப்பாடலில் தலைவியின் தமர் வரைவு வேண்டி வந்த தலைவனுக்கு

மகட்கொடை தர மறுக்கின்றனர். அந்நிலையில் தோழி செவிலியிடம், நண்டின் மண்ணால் செய்யப்பட்ட வளை நிரம்பும் படி நெற்பூ உதிர்ந்து கிடக்கும் ஊரைக் கொண்ட தலைவன் பொருட்டு தலைவி, தன் பேரழகு கெட மெலிதல் என்ன காரணத்தாலோ? என்றுக் கேட்டு தோழி அறத்தொடு நிற்கிறாள். இஃது ஏத்தல் என்னும் அறத்தொடு நிலையாகும்.

குறிஞ்சித் திணையில் வரும் 205, 210, 212, 220, 228, 241, 242, 248, 250, 271 எண்ணுள்ள பாடல்கள் அறத்தொடு நிற்றல் என்ற துறையிலும் வெறிப்பத்து என்ற பகுதியில் வரும் 243, 244, 247, 249 எண்ணுள்ள பாடல்களில் அறத்தொடு நிற்றல் என்று வெளிப்படையாக துறை சொல்லவில்லை என்றாலும் வெறியாட்டை விலக்குவதற்காகவும் களவை வெளிப்படுத்து வதற்காகவும் அமைந்ததாக காணப்படுகிறது.

ஒத்த தலைவன், தலைவி இருவருக்குமிடையே களவொழுக்கம் நிகழ்ந்து கொண்டிருக்க, தலைவி, கற்புக்கடம் பூண்டாள் என்பதை அறியாத நிலையில் நொதுமலர் வரைவு வேண்டி விட்டொளித்து, தலைவிக்கு உண்டான துன்பத்தினைக் கண்ட இவள் இவ்வாறு ஆவதற்கு காரணம் என்ன? என்று செவிலி வினவுவாள். அந்த நிலையில் தோழி உண்மையுரைக்கும் வகையில் அறத்தொடு நிற்பாள், இதனை,

“அன்னை வாளழிவேண் டென்னை
என் றோழி
நனிநா னுடைய னின்னு மஞ்சும்
ஒலி வெள்ளருவி யோங்குமலை நாடன்
மலர்ந்த மார்பிற் பாயல்
துஞ்சிய வெய்யள் நோகோ யானே”

(ஐங்.குறிஞ்சி - 205)

இது நொதுமலர் வரைவு வேண்டி விட்டுளி தலைமகட்கு உளதாகிய வருத்தம் நோக்கி, ‘இவள் இவ்வாறு ஆவதற்கு காரணம் என்னே’? என்று வினவிய செவிலிக்கு தோழி அறத்தொடு நின்றது. இப்பாடலில் நொதுமலர் வரைவு வேண்டி விட்டமையின் பெரு நாணமும், அதனால் உளதான ஏதம் பற்றிய அச்சமும் உடைமையாள் மேனி வருத்திக் காட்டினாள் என்று செவிலிக்கு உணர்த்தினாள். நாடன் மார்பில் துஞ்ச விரும்புதலை நாணத்தாலும் அச்சத்தாலும் பிறர்க்கு உணர்த்தலாகாமைக் கூறி அறத்தொடு நின்றாள், என்பதனை,

“நோய் அலைக் கலங்கிய மதன் அழி பொழுதில்
காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்
யானே பெண்மை, தட்ப நுண்ணிதின் தாங்கி
கைவல் கம்மியன் கவிள் பெறக் கழாஅ
மண்ணாப் பசு முத்து ஏய்ப்ப, குவி இணர்ப்
புன்னை அரும்பிய புலவு நீர்ச் சேர்ப்பன்
என்ன மகன் கொல்-தோழி தன்வயின்
ஆர்வம் உடையார் ஆகி
மார்பு அணங்குறுநரை அறியாதோனே”

(நற்.94)

என நற்றிணைப் பாடலில் தலைவி கூறுவதாலும் இக்கருத்து உணரப்படுகின்றது. ‘ஒலி வெள்ளருவி ஓங்கு மலை நாடன்’ என்பதில் ஒலி வெள்ளருவி என்பது குறிப்பால் ஏதீடு முறையும், ஓங்குமலை நாடன் என்பதில் ஏத்தல் முறையையும், துஞ்சிய செய்யல் என்பது வேட்கையுரைத்தலுமாகக் கருதப்படுகிறது. தோழி அறத்தொடு நிற்றலின்

போது எளித்தல், ஏத்தல் என்ற அறத்தொடுநிலைப் பகுதிகளுள் உண்மையும் செய்யலாம் என்பதனை,

“அலங்குமலை பொழிந்த வகன்க ணருவி
ஆடுகழை யடுக்கத் திழிகரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழு மன்னாய்”

(நற்.112)

இது நொது மலர் வரைவின் கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. இப்பாடலில் தலைமகன் மார்பினைப் பெருவரையன்ன திருவிறல் வியன் மார்பு என்று சிறப்பிக்கக் கருதி கூறியதைத் திருக்கத்தேவரின்,

“திருவீற்றிருந்த மார்பன் சேவடி சேர்ந்த யாங்கள்”

(சீவகசிந்தாமணி 1930)

என்னும் பாடல்வரிகளில் காணலாம். அத்தகைய நாடனோடு இவள் தொடர்பு கொண்டிருக்கின்றாள். அந்நாடனை இவள் பிரிவதற்கு மயங்கப் பெருமையால் இடையறாது கண்ணீர் சொரிந்து அழுகின்றாள் என்ற உண்மையைத் தோழி புலப்படுத்துகின்றாள். இப்பாடலில் எளித்தல், ஏத்தல் முறையுடன் உண்மைச் செப்பல் என்ற முறையும் காணப்படுகிறது.

தலைவிக்கு ஒரு தலைவன் பால் உள்ள களவொழுக்கத்தை அறியாத நிலையில் பிறர் வரைவு வேண்டி வரும் போதும் இல்லத்தார் அதற்கு இணங்கி விடுவார்களோ என்று அஞ்சியும் இணங்கினால் தமக்கு பெரிதும் துன்பமாகுமோ என்று அஞ்சியும் தலைவி வருந்துவாள் என்றும், அந்த நிலையில் தோழி அறத்தொடு நின்று நிலையைச் சரி செய்வாள் என்றும் இதனால் அறியப்படுகிறது.

தலைவன் தலைவி இருவருக்குமிடையே களவொழுக்கம் நிகழும் போது தோழி பல தடவை தலைவனை வற்புறுத்தியதால் தலைவன் தன் சுற்றத்தாரை மகட்பேசி வரத் தலைவியின் இல்லத்திற்கு அனுப்புவாள். இவ்விருவர் தம் களவொழுக்கத்தை அறியாத நிலையில் தலைவியின் இல்லத்தார் மகட்கொடை மறுத்துவிடுவர். அஃது அறிந்த தோழி தலைவியின் கருத்தறிந்த செவிலிக்குத் தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாக உணர்த்துவாள்.

“அம்ம வாழி தோழி நம்மூர்
நிரந்திலங் கருவிய நெடுமலை
இரந்து குறையுறா அன்பெயரின்
என்னா வதுகொனம் மின்னுயிர் நிலையே”

(ஐங்.228)

இது தலைமகன் வரைவு வேண்டிவிடத் தன் மறுத்துழி அவள் கேட்குமாற்றல் தலைமகட்குச் சொல்லுவானாய்த் தோழி அறத்தொடு நின்றது. இப்பாடல் அடிகளில் தோழி, பெருந்தகையான தலைவன் தம் சுற்றத்தார் முன் குறையிறந்து நிற்க. அவன் குறையை நாம் முடித்துக் கொடுக்காத நிலையில் அவள் நம்மூரை விட்டுப் போய்விட்டால் நமது இனிய உயிராகிய தலைவியின் நிலைய யாதாகுமோ? அறிகிலேன் என்று சொல்லுகின்ற முறையில் அறத்தொடு நின்றாள். இங்கு இன்பம் நல்கும் பண்பு நோக்கி இன்னுயிர் என்றதனை,

“இழந்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழந்தொறூஉம் காதற்று உயிர்”

(திருக்குறள் - 1296)

என்னும் குறட்பா வழி அறியப்படுகிறது.

## வெறியாடுதல்

களவொழுக்கத்தில் ஏற்பட்ட தலைவியை இற்செறித்து புறம் போகாதபடி சுற்றத்தார் காவல் செய்தார்கள். ஆகையால் தலைவனைச் சந்திக்கும் நிலை தவிர்ந்தது. அதனால் வருத்தம் அடைந்த தலைவி பெரிதும் மெய் வேறுபட்டாள். செவிலி, தலைவியின் இம்மெலிவு தெய்வத்தால் ஆனது என்று கருதி வெறியாட்டு நிகழ்த்த முற்பட்டாள். அவ்வெறியாடுதலை விலக்கும் பொருட்டு தோழி உண்மையைச் சொல்லி அறத்தொடு நிற்பாள்.

அறத்தொடு நின்றது என்ற துறையில் அமைந்த பாடலில், உன் மகள் அடைந்துள்ள நோய் தணிதற்கு வெறியாட்டு மட்டுமே போதாது. அதற்கு இயைந்த மற்றொரு மருந்தும் உண்டு. கேட்பாயாக என்று சொல்லி நின் மகள் நமது புழக்கடைத் தோட்டத்தின் கண் உள்ள குண்டுக் கல்லின் உச்சியிலேறி, அத்தலைவனுடைய நாட்டின் கண்ணுள்ள அழகிய மலையை நோக்கி நின்று நிலைப்பெற்றால்தான் தீர்தற்கு உரியது என்று சால்வதால் தோழியின் திறனை அறியமுடிகிறது. இதனை,

“நாமுறு துயர நோக்கி யன்னை
வேலற் றந்தா ளாயினவ் வேலன்
வெறி கமழ் நாடன் கேண்மை
அறியுமோ தில்ல செறியெயிற் றோயே”

என்னும் பாடலில் அறியமுடிகிறது. வேலன் வந்து வெறியாட்டு நிகழ்த்தும் போது அவ்வேலனால் தலைவனோடு யாம் கொண்டுள்ள காதல் தொடர்பினை அறிந்து கூற வல்லவன் ஆவானோ? ஆகமாட்டான் எனவே தலைவி உற்றநோய் தெய்வத்தால் ஆனது அன்று என்றும் வெறிகமழ் நாடன் ஒருவனோடு கேண்மை கொண்டதனால் உற்றதென்றும், இது தீர்தற்கு நாடனுக்கு நம் நங்கையைக் கொடுப்பதன்றி, வேலனை வினாதலும், வெறியாடுதலும் வேண்டாம் என்பதைச் செவிலி உணருமாறு தோழி தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பால் உணர்த்துவாள். வெறியாட்டு நிகழ்த்தவிருக்கும் செவிலியின் அறியாமையைக் கண்டு தோழி வெறி விலக்குதலை,

‘கறிவளர் சிலம்பிற் கடவுட் பேணி
அறியா வேலன் வெறியெனக் கூறும்
ஆதணங் கொள்ளுவை அனையிவள்
பதமலர் மழைக்கண் புலம்பிய நோய்க்கே’

(ஐங்.243)

என்னும் பாடலில் அறியமுடிகிறது. வேலன் யாது கேட்பினும் வெறியெனக் கூறுவான் என்றும், நீயும் உண்மைக் காரணம் கண்டு பரிகாரம் செய்தாலொழிய நோய் தீராது என்றும் தோழி வெறி விலக்கினாள். இஃது வேட்கையுரைத்தல் என்ற நிலையில் அறத்தொடு நிற்றலாகும். மேலும், தோழி வெறி விலக்குதலை,

“அன்னை தத்த தாகுவ தறிவென்
பொன்னகர் வரைப்பிற் கன்னந்
தூக்கிமுருகென மொழியு மாயின்
அருவரை நாடன் பெயர்தெகொலோ வதுவே”

(பாடல்எண்.247)

இப்பாடலில் அன்னை வெறி அயர்தற் பொருட்டு வேலனைக் கொணர்ந்தமையையும், அவன் எடுக்கும் வெறியாடலால் என்ன பயனைச் செய்யுமோ யான் அறியேன் என அமைந்துள்ளது. வேலன் இவளை அணங்களையோன் முருகன் என்று கூறுவானாயின், அம்முருகு என்னும் பெயர் அரிய மலை நாடனது பெயராகவும் இருக்கலாம் எனத் தோழி வெறி விலக்குவாள்.

“பெய்ம்மணல் வரைப்பிற் கழங்குபடுத் தன்னைக்கு
முருகென மொழியும் வேலன் மற்றவன்
வாழிய விலங்கு மருவிச்
சூர்மலை நாடனை யறியா தோனே”

(ஐங்.249)

இது, தலைமகள் வேறுபாடு கழங்கினால் தெரியும் என்று வேலன் கூறிய வழி அதனைப் பொய்யென இகழ்ந்த தோழி வெறி விலக்கிச் செவிலிக்கு அறத்தொடு நின்றது. இப்பாடலில் வேலன், தலைவிக்கு நோய் செய்த மலைநாடனை அறியாமல் அறிந்தவன் போல முருகு என மொழிந்ததை அன்னை மெய்யெனக் கொண்டு அவன் வாழிய என்றாள். இதில் தலைவனை இலங்கம் அருவிச் சூர்மலை நாடன் என்றது ஏதீடு என்ற முறையில் அமைந்த அறத்தொடு நிற்றலாகும். பாலைத் திணையில் வரும் முன்னிலைப் பத்தில் 366,367 எண்ணுள்ள பாடல்களில் தோழி அறத்தொடு நிற்றலைக் காணலாம். இப்பாடல்களில் இரண்டும் பூத்தரு புணர்ச்சி, புனல் தரு புணர்ச்சி என்னும் முறையில் அமைந்துள்ளன.

“அன்னாய் வரிவேன் டன்னையென் தோழி
பசந்தனள் பெரிதெனச் சிவந்த கண்ணை
கொன்னே கடவுதி யாயினென்ன தூஉம்
அறிய வாகுமோ மற்றே
முறியிணர்க் கோங்கம் பயந்த மாறே”

(பாடல் எண்.366)

இது தலைமகளை நோக்கி, இவ்வேறுபாடு எயிற்றனான் ஆயிற்று என்று வினவிய செவிலிக்குத் தோழி அறத்தொடு நின்றது. இப்பாடலில், தலைவி மிகவும் பசப்பெய்தி வேறுபடுதற்குக் காரணம் முன்னாள் தலைவன் தந்த தளிரும் பூங்கொத்துக்களும் உடைய கோங்கின் பூவைக் கொடுத்தமையால் விரைந்தது என்பதால் இங்கு பூத்தரு புணர்ச்சியாயிற்று.

“பொரியயரைக் கோங்கின் பொன்மருள் பசவீ
விரியிணர் வேங்கையொடு வேறுபட மிலைச்சி
விரவுமல ரணிந்த வேனிற் கான்யாற்றுத்
தேரொடு குறுக வந்தோன்
பேரொடு புணர்ந்தன் அன்னையில் லூயிறே”

(நற்.95)

இது நொதுமலர் வரைவின் கண் தோழி செவிலிக்கு அறத்தொடு நின்றது. இப்பாடலில், நொதுமலர் வரைய வந்த நிலையில் தோழி செவிலியிடம், இளவேனிற் பருவத்தில் காட்டாற்றில் ஆயத்தாரும் நானும் நின் மகளும் நீராடினோம். நின் மகள்

பூப்புனல் நீரோடு அடித்து செல்லப்படுகையில் கோங்கம்பு அணிந்த தலைவன் ஒருவன் எங்கிருந்தோ தேரில் வந்து அவளைக் காப்பாற்றினான். அவனால் நீரிலிருந்து கரையேறி பிழைத்துக் கொண்ட இவள் உயிர் அத்தலைவனின் பெயரோடு இணைவதாயிற்று என்று கூறி நிற்கின்றாள். இஃது புனல் தற்புணர்ச்சியாயிற்று.

## செவிலி அறத்தொடு நிற்றல்

தலைவியின் வேறுபாடுக் கண்டு நற்றாய், செவிலியை வினவும் போது செவிலி முன்னிலை மொழியால் தலைவியின் நிலைக் குறித்து தோழி மூலம் தான் அறிந்தவற்றைக் நற்றாயிடம் கூறுவாள். இதனை நம்பியகப் பொருளில்,

“மின்னிடை வேண்டுமை கண்டுதாய் வினாவுழி
முன்னிலை மொழியாள் மொழியும் செவிலி”

(அகப்பொருள் விளக்கம் 178)

என்னும் நூற்பா வழி அறியலாம். நற்றாய் செவிலித்தாய் எவ்வாறு அறிவாளோ அவ்வாறே தானும் அறிவாள். இவ்விறு தாயாரிடையே பெரிதும் வேறுபாடு காணப்பெறாது என்பதனை,

“தாய் அறிவுறுதல் செவிலியோடுங் ஒக்கும்
என்னும் நூற்பா உணர்த்துகின்றது”

(பாடல் எண்.48)

ஐங்குறுநூற்றில் செவிலி அறத்தொடு நிற்றலுக்குரிய பாடல்கள் வெளிப்படையாக காணப்படவில்லை. ஆனால் உடன் போற்றும் வழியாக செவிலி அறத்தொடு நிற்றலை பாலைத்திணையில் காணலாம்.

“அத்த நீரிடை யவனோடு போகிய
முத்தேர் வெண்பன் முகிழ்நகை மடவரல்
தாய ரென்னும் பெயரே வல்லா
நெடுத்தேன் மன்ற யானே
கொடுத்தோர் மன்றவவ ளாயத் தோரே”

இது தலைமகள் உடன் போகிய வழித்தெருட்டுவோர்க்குத் செவிலித்தாய் கூறியது. இப்பாடலில், நீண்ட வழியையுடைய சுரத்தின் கண் அவனோடு புணர்ந்து உடன் போகிய முத்துப் போன்ற வெள்ளிப் பற்களையும் மகிழ்ந்த நகையினையும் உடைய தலைமகளுக்குத் தாயாய் என்னும் பெயரை நான் என்னால் வல்ல வகையாய் பெற்றேன். எனினும் அவனை அவருக்கு உரியவளாக கொடுக்கும் பேறு பெற்றவர் அவர். ஆயத்தாரே, ஆதலின் அப்பெயர் பெற்றும் பேறு பெறாதவளாகினேன் என்று செவிலி உடன் போக்கி வழி அறத்தொடு நின்றாள். இஃது முன்னிலையைப் புறமொழி.

“மள்ள ரன்ன மரவன் தழீஇ
மகளி ரன்ன வாடுகொடி நுடங்கும
அரும்பதங் கொண்ட பெரும்பத வேனில்
காதல் புணர்ந்தன ளாகி யாய்கழல்
வெஞ்சின விறல் வேற் காளையொடு
இன்றுபுகு தருமென வந்தன்று தூதே”

(ஐங்.400)

இஃது உடன் போய் வதுவை அயர்ப்பட்ட தலைவி, தலைவனோடு இன்று வரும் எனக் கேட்ட செவிலித்தாய் நற்றாய்க்கு சொல்லியது. இப்பாடலில் வீரரை ஒத்த மரவ மரங்களை மகளிர் போலும் அசைக்கின்ற கொடிகள் தழுவி நுடங்கும் அரிய உண்

பொருள்களைக் கொண்ட பெருஞ் செவ்வித்தாகிய வேனிற் பருவத்தின்கண் வதுவை புணர்ந்தனளாய் நம் மகள் ஆய்தணிக்கப்பட்ட கழலும், செவ்விய சினமும், விறயல்மிக்க வேலுமுடைய காளைப் போன்ற தலைவனுடன் இன்று வருவாள் என செவிலி நற்றாயிடம் கூறியதைக் காண முடிகிறது.

## நற்றாய் அறத்தொடு நிற்றல்

நற்றாய் அறத்தொடு நிற்கும் போது வாய் திறந்து பேசாள். தலைவியின் தந்தையும் உடன் பிறந்தாரும் குறிப்பாய் உணர்ந்துக்கொள்வர். இதனை தொல்காப்பியர்,

"தந்தையும் தன்னையும் முன்னர்த்தின் உணர்ப்பு" என்று குறிப்பிடுகின்றார். ஐங்குறுநூற்றில் நற்றாய் நிற்றலுக்குரிய பாடல்கள். உடன்போர்க்கு வழிக்காணப்படுகிறது.

> "மாண்பில் கொள்கையொடு மயங்குதுயர் செய்த
> அன்பி வறனு மருளின்று மன்ற
> வெஞ்சுர மிறந்த வஞ்சி லோதிப்
> பெருமட மான்பினை யலைத்த
> சிறுநுதற் குறுமகட் காட்டியவம்மே"

இஃது உடன்போய் தலைமகள் வந்துழித்தாய் சுற்றத்தாக்குச் சொல்லியது. இப்பாடலில் மாண்பு என்பதனை தொல்காப்பியர்.

> கற்பு எனப்படுவது காரணமொடு புணரப்
> கொளற்குறி மரபில் கிளவன் கிளத்தியை
> கொடைக்குறி மரபினோர் கொள்வதுவே"

என்னும் நூற்பாவில் தலைவியை கொல்லுதற்குரிய தன்மையுடைய தலைவன் கொடுத்தற்குரிய உரிமையுடைய தன்மையினர் கொடுப்ப, மணம் செய்து கொள்வதாகும். களவின் கண் உடன் போக்கு என்பது அறம் எனப்பட்டது. இதனை, "அறந்தலைப் பிரியா ஆறு" எனக் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள பாடல் வரிகள் மூலம் அறியப்படுகிறது. மாண்பில்லாக் கொள்கையால் மயங்குவதற்கு ஏதுவாகிய துயரத்தினை செய்து அன்பொடு கூடாத அறனும் அவ்வன்பின் வழித்தோன்றிய அருளை உடையதாயிற்று. வெம்மையான கடந்து சென்ற அழகிய சிலவாகிய கூந்தலையும் சிறிய நுதலையும் உடைய பெரிய மடப்பம் பொருந்திய மாண்பினை ஒப்பும் ஒக்கும் இளையவள் மீண்டு வந்தாளைக் காட்டுவேன் என்று நற்றாய் சுற்றத்தார்க்கு உணர்த்தினாள்.

## முடிவுரை

ஐங்குறுநூற்றில் தலைவி 'அறத்தொடு நிற்றல்' குறித்தபாடல்கள் சிலவேயாயினும் அவற்றில் தொல்காப்பியரின், நூற்பா ஏற்புடையதாக அமைகின்றன. தோழி அறத்தொடு நிற்றலுக்குரிய பாடல்கள் குறிஞ்சி திணையில் பெரும் பான்மையாக காணப்படுகிறது. மருதத்திணையிலும், நெய்தல் திணையிலும் சில பாடல்கள் காணப்படினும் தோழி அறத்தொடு நிற்றலுக்குரிய முறைகள் ஐங்குறுநூற்று பாடல்களில் பொருந்திக் காணப்படுகின்றன. செவிலி அறத்தொடு நிற்றலும், நற்றாய் அறத்தொடு நிற்றலும் ஐங்குறுநூற்றில் வெளிப்படையாக இடம்பெறவில்லை. எனினும் உடன் போக்கு வழி அறத்தொடு நிற்றல் நிகழும் என்னும் கருத்து வெளிப்படுகின்றன. மேலும் இவ்வாய்வினை விரிவாக ஆராய முற்படலாம்.

## துணைநூற் பட்டியல்


1. ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), கழக வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600 018.
2. வ.த. இராம சுப்பிரமணியம் (உ.ஆ), நம்பியகப் பொருள் விளக்கம், கிட்டு நூலகம், சென்னை.
3. வ.சுப. மாணிக்கனார் (உ.ஆ), தமிழ்க்காதல், பாரிநிலையம், முதற்பதிப்பு- 1962, சென்னை.
4. முனைவர் தமிழண்ணல், தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-1, மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு- 2003, சென்னை - 600 018.
5. வி. நாகராாசன் (உ.ஆ), குறுந்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு- 2004, சென்னை.
6. கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு- 2004, சென்னை.
7. ஆ. விசுவநாதன் (உ.ஆ) , கலித்தொகை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், முதற்பதிப்பு- 2004, சென்னை.